1986 ஏப்ரல் 25]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உறுப்பினர் கனி அவர்களுக்கு நான் தெரிவிக்கிற பதில், திட்டம் இன்னும் கனியாகவில்லை. காயாகத்தான் இருக்கிறது. கனியும் வரையும் அவர் காத்திருக்க வேண்டும்.

திரு. த. புஷ்பராசு : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, குடிதண்ணீருக்காக புதுக்கோட்டைக்கு காவிரி தண்ணீர் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். புதுக்கோட்டை மாவட்டம் மிகுந்த வறட்சியான மாவட்டமாகும். அந்த மாவட்டத்திற்கு குடிதண்ணீர் கொண்டு வருகிறபோது பாசனத்திற்கும் தண்ணீர் கொண்டு வருகிற அளவிற்கு திட்டத்தை தயார் செய்தால் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு விமோசனம் பிறக்கும். ஆகவே அரசு புதுக்கோட்டை மாவட்டத்தில் பாசனத்திற்கும் காவிரித் தண்ணீர் பயன்படுத்துகிற அளவிற்கு திட்டத்தை தயாரிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, புதியசிக்கலை கிளப்பி வரக்கூடிய குடிதண்ணீருக்கும் பாதகத்தை உருவாக்கிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கத்திவாக்கத்தில் இரயில்வே மேம்பாலம்.

561—(*வினா எண். 4064)—திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எண்ணூர் பகுதியில் உள்ள கத்திவாக்கம் ரெயில் நிலையத்தில் மேம்பாலம் கட்ட சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : தலைநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கத்திவாக்கம் ரெயில் நிலையத்தில் மேம்பாலம் கட்டுகிற குறிப்பு இல்லையென்று சொன்னார்கள். அது மிகப்பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். 1982 ஆம் ஆண்டில் கூட நம்முடைய அரசாங்கப் பேருந்து ஒன்றிற்கு பாதிப்பு ஏற்பட்டு ஆறு தொழிலாளர் நண்பர்கள் இறந்துவிட்டார்கள். ஆகவே அவசியமாக இருக்கிற அந்தப் பகுதிக்கு நம்முடைய நடுவண் அரசுக்கு நம்முடைய மாநில அரசு பாலம் கட்ட வேண்டுமென்று பரிந்துரை வழங்குவீர்களா? அந்தப் பகுதியில் பாலம் கட்டுகிற வாய்ப்பை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எண்ணூர் ரெயில் நிலையத்திற்கு வடக்கே ஒரு கிலோமீட்டர் தூரத்தில் ஒரு வாகன சுரங்கப் பாதை அமைக்கப்பட்டுள்ளது, இப்போது அதிலே வாகனங்கள் சென்று கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் எண் 8 என்ற கடவில் 150 லட்சம் ரூபாயில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கும் ஒப்புதல் தரப்பட்டு அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கிற நிலையில் இருக்கிறது. ஆகவே இதன்காரணமாக அதற்கு அருகிலேயிருக்கிற இதற்கு மேம்பாலம் கட்டுவது என்பது பிரச்னைக்குரிய காரியமாக இருக்கும். மத்திய அரசுக்கு நாம் எழுதினாலும் கூட அவர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : தலைவர் அவர்களே, அமைச்சர் பெருந்தகை குறிப்பிடுவது போல தொழிற்சாலையில் சுரங்கப் பாதை இருக்கிறதென்பது உண்மை. அதில் எல்லா தொழிலாளர்களும் செல்ல முடியாது. அங்கே கோத்தாரி, அசோக் லேலண்ட், எண்ணூர் அனல் மின்நிலையம், பாரி கம்பெனி போன்ற கம்பெனிகள் இருக்கின்றன. இவ்வளவு நிறுவனங்களின் தொழிலாளர்களும் அந்தப் பாதை வழியாகச் செல்ல முடியாது. குறிப்பிட்ட தொழிலாளர்கள் தான் அந்த வழியாகச் செல்ல முடியும். ஆகவே ஊதுகிற சங்கை ஊதிவைத்தால் அது நிச்சயமாக வெற்றிச் சங்காக இருக்குமென்ற நம்பிக்கையோடு தமிழக அரசு பரிந்துரை செய்தால் சிறப்பாக இருக்கும். அதைச் செய்வார்களா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சங்கை ஊதுகின்ற போது தேவையில்லாமல் ஊதிக்கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் மத்திய அரசுக்கு வருமேயானால், தேவையான போது நாம் ஊதுகின்ற போது அதுபோன்றே நினைப்பார்கள். எனவே அந்த வித்தியாசம் வேண்டுமென்ற காரணத்தால் மிக அவசியமாக இருப்பதை நாம் எழுதிக்கொண்டிருக்கிறோம். நமக்கிருக்கிற எண்ணமெல்லாம் நாம் எழுதுகிற அத்தனையும் மத்திய அரசில் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களானால் மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். ஆனால் 14, 15 மேம்பாலங்கள் கட்டவேண்டுமென்று நாம் பரிந்துரை செய்தால் ஆறு இடங்களுக்குத்தான் கட்டுவதற்கு ஒப்புதலை அவர்கள் தந்திருக்கிறார்கள். எனவே அந்த நிலையில் இவைகளையெல்லாம் கொஞ்சம் நிறுத்தி வைத்திருக்கிறோம், வேண்டாமென்ற எண்ணம் நமக்கில்லை. ஆனால் அந்த இயக்கத்தைச் சேர்ந்த திரு பாரதி அவர்களே வலியுறுத்துகிற காரணத்தால் அந்தப் பட்டியலில் நாம் இதையும் சேர்த்து வைக்கலாம்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரயில்வே மேம்பாலம் எந்த அடிப்படையில் கட்டப்படுகிறது. போக்குவரத்ினுடைய அடிப்

1986 ஏப்ரல் 25]

படையில் கட்டப்படுகிறதா? அல்லது வருவாயின் அடிப்படையில் கட்டப்படுறதா? அப்படி போக்குவரத்தின் அடிப்படையில் கட்டப்படுகிறது என்றால், தலைநகராக இருக்கின்ற வேலூர், திருப்பத்தூர் பகுதியில் அதிகமான நெரிசல் இருக்கிறதே, அதற்கு ஏன் கட்டவில்லை? திருவண்ணாமலை, திண்டிவனம் ரோட்டில் உள்ள ரயில்வே மேம்பாலத்தை ஏன் கட்டவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ரயில்வே போக்குவரத்தினுடைய அந்த பயணத்தை பொறுத்துத்தான் இது கட்டப்படுகிறது. அந்த ரயில்வே பாதையில் குறைந்த பட்சம் 50 ஆயிரம் முறைக்கு மேலே ஒரு ஆண்டுக்கு ரயில்கள் கடந்து செல்லுமானால் அந்த இடத்திலே கட்டவேண்டும் என்று மத்திய அரசாங்கம் நிர்ணயம் வைத்திருக்கிறது. எனவே அதிக பட்சமாக எந்த இடத்திலே அப்படி இருக்கிறதோ, அங்கே இருந்து ஆரம்பித்து கொஞ்சம் கொஞ்சமாக கட்டிக்கொண்டு வருகிறார்கள். எனவே இவைகள் எல்லாம் முறையான நேரத்திலே நிச்சயமாக வரும் என்று கருதுகிறேன்.

அய்யம்பாளையம் தாண்டிக்குடி மலைச்சாலை.

562—(*வினா எண் 4684) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம் அய்யம்பாளையத்தில் இருந்து தாண்டிக்குடி செல்லும் மலைச் சாலையை விரிவுபடுத்த அரசு திட்டம் தீட்டியுள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அத்தகைய திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம் அய்யம்பாளையத்தில் இருந்து தாண்டிக்குடி செல்லும் மலைச் சாலையில் ஒவ்வொரு ஆண்டும் விபத்துக்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. எனவே இதற்கு முன்னுரிமை கொடுத்து, அவசர நடவடிக்கை எடுப்பதற்கு ஏதேனும் வழிவகை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பாதைகளை எல்லாம் விரிவுபடுத்தவேண்டும், அதைச் சரியாக பராமரிக்கவேண்டும் என்பது அவசரமான காரியமாகத்தான் இருக்கிறது. எனவே இதில் மிக அவசரம் எது என்பதைப் பார்த்து ஒரு பட்டியலைப் போட்டு நாம் காரியங்களைத் தொடர்ந்து